# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் மற்றும் தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட், திருப்பூர் தொடர்பாக 04.02.2010 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்ட சுருக்க நடவடிக்கை விவரங்கள்.**

| | | |
|---|---|---|
| தொழிற்திட்டத்தின் பெயர் | : | 1. தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட்<br>சர்வே எண்.327, தொட்டிபாளையம் கிராமம் போயம்பாளையம் பிரிவு, பிச்சாம்பாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 603.<br>2. தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட்<br>சர்வே எண்.30/1,2,3, அய்யாபிள்ளை தோட்டம் சோமனூர் ரோடு, வேட்டுவபாளையம், மங்கலம் திருப்பூர் – 641 663. |
| நிகழ்விடம் | : | மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கு<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் |
| தேதி மற்றும் நேரம் | : | 04.02.2010 முற்பகல் 11.00 மணி |

முன்னிலை

| | | |
|---|---|---|
| 1. திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப. | : | மாவட்ட ஆட்சியர்<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர் |
| 2. திரு. இரா. கண்ணன் | : | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் |

திட்ட அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| 1. திரு. ஈஸ்வரமூர்த்தி | : | மேலாண்மை இயக்குனர்<br>தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட்<br>திருப்பூர் |
| 2. திரு. சுப்ரமணியம் | : | மேலாண்மை இயக்குனர்<br>தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட்<br>திருப்பூர் |

பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் எண்ணிக்கை 73, அவர்களின் வருகைப் பதிவு இணைப்பு-1ல் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர்** அவர்கள், மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம், சுத்திகரிப்பு நிலைய நிர்வாக இயக்குனர்கள், விவசாய பெருமக்கள் மற்றும் பத்திரிக்கை நிருபர்கள் ஆகியோர்களை வரவேற்று, அமையவிருக்கின்ற தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் மற்றும் தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட், திருப்பூர் பற்றி கீழ்கண்டவாறு பொதுமக்களுக்கு விவரித்தார்.

“சுற்றுச் சூழல் பாதிப்பு, தாக்கங்கள் மற்றும் எதிர்மறை தாக்கங்கள், அதை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் குறித்த சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தி/ள். பார்க் பொது கழிவு நீர்

சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் மற்றும் தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட், திருப்பூர் அவர்களால் தயாரிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006-ன்படி ஏற்கனவே திருப்பூர் மாவட்டத்திலுள்ள 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் அக்டோர், 2008-ல் நடைபெற்றது. மீதமுள்ள இரண்டு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களான தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் மற்றும் தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட், திருப்பூர் ஆகியவற்றிற்கு இன்று பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறுகிறது. இந்த நிகழ்வானது புகைப்படங்கள் எடுக்கப்பட்டும், ஒலி ஒளி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டும் கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டும் மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும். பொதுமக்கள் வாய்மொழியாகவும் அல்லது எழுத்துபூர்வமாகவும் தங்களது கருத்துக்களை இக்கூட்டத்தில் தெரிவிக்கலாம். அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை பொதுமக்கள் கேட்புணர்வை துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளரின் அறிவிப்பிற்கு பின்னர் **மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர்** அவர்கள் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்வாகிகள், பத்திரிக்கை நிருபர்கள், விவசாயப் பெருமக்கள் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் அனைவரையும் வரவேற்றார். இந்த நிகழ்வானது புகைப்படங்கள் எடுக்கப்பட்டும், ஒலி ஒளி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டும் கூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் அரசுக்கு தக்க நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும். மேலும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்வாகிகளை அமையவிருக்கும் திட்டம் சம்பந்தமாக விரிவான விளக்கவுரை அளிக்குமாறும், அதற்கடுத்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ எழுத்துப் பூர்வமாகவோ தெரிவிக்கலாம் என்று கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில், அமையவிருக்கும் இந்த இரண்டு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்பான சுற்றுச் சூழல் சம்பந்தமான கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**இதன்படி, தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (பி) லிமிடெட் நிர்வாகிகள் திட்டம் சம்பந்தமான சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் அதை நிவர்த்தி செய்யும் முறைகள் சம்பந்தமாக அவர்களுடைய திட்ட ஆலோசகரான திரு. ஜெயசீலன் அவர்கள் கணினி திரைக்காட்சி மூலமாக கீழ்கண்டவாறு விவரித்தார்.**

விவசாயிகள் வளர வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும், சுற்றுச் சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும் தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திட்ட அறிக்கை அண்ணா பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமானது திருப்பூருக்கு ஒரு முன்னுதாரணமான சுத்திகரிப்பு நிலையமாக விளங்கும். அதற்கடுத்து அவர் திருப்பூர் நகரத்தை பற்றியும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய அமைவிடம் பற்றியும் விளக்கினார். இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமானது நொய்யல் ஆற்றிலிருந்து 5 கி.மீ. தொலைவிற்கு அப்பால் உள்ளதால் சுற்றுச் சூழல் துறை அரசாணை மீறப்படவில்லை. இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 9 சாயத் தொழிற்சாலைகள் உறுப்பினர்களாக உள்ளனர். அவை அனைத்தும் போயம்பாளையம் கிராமத்திற்குள் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2 கி. மீ. சுற்றளவிற்குள் அமைந்துள்ளன. மற்றும் அனைத்து சாயத் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைக்கான பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னலாடைகளுக்கு சாயம் ஏற்றுவதில் கழுவுதல், சாயமேற்றுதல், கழுவுதல் மற்றும் காய வைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும். எங்களது பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய உறுப்பினர்களுக்கு மொத்தமாக ஒரு நாளைக்கு 3650 கன மீட்டர் அளவு தண்ணீர் ஒருமுறை மட்டுமே தேவைப்படும். இவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது முதன்மை சுத்திகரிப்பு நிலையத்தில் புதிய தொழில்நுட்பமான ஏர் ∴புளோடேசன் மூலமாக சுத்திகரிக்கப்பட்டு எதிர்மறை சவ்வூடு பரவல் முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் கழிவு நீர் கொதிகலன் ஆவியாக்கப்பட்டும் சுத்திகரிக்கப்படுகிறது. கழிவு நீர் கொதிகலனில் எடுக்கப்பட்ட உப்பும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எடுக்கப்பட இருக்கின்ற திடக்கழிவுகளும் சென்னைக்கு அருகே கும்மிடிப்பூண்டியில் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய தர நிர்ணயங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ள பொது திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இடைப்பட்ட காலத்தில் மேற்படி திடக்கழிவுகள் பொது சுத்திகரிப்பு நிலைய வளாகத்திற்குள்ளேயே ஒதுக்குப்புறமான இடத்தில் பிளாஸ்டிக் மூட்டைகளில் கட்டப்பட்டு கூரையின் கீழ் சேமித்து வைக்கப்படும்.

எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்படும் நன்னீரும் மற்றும் நேனோ பில்டரேசனிலிருந்து வெளிப்படும் உப்பு கலந்த நீரும் எங்களது உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கே மறு உபயோகத்திற்காக திருப்பி அனுப்பப்படும். இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இந்த திட்டத்தின் தாக்கம் மற்றும் மேம்பாடு

சம்பந்தமாக மண், நிலத்தடி நீர் மற்றும் காற்று ஆகியவற்றின் மாதிரிகள் எடுக்கப்பட்டு தர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் காற்றின் மாசு அளவு தேசிய தர நிர்ணய அளவுகளுக்குள் உள்ளது. மேலும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அடர்த்தியான பசுமை வளையம் அமைக்கப்பட்டும் சுற்றுச் சூழல் மேம்படுத்தப்படும். மேலும் இத்திட்டப் பகுதிக்கு அருகில் வனவிலங்கு சரணாலயங்களோ, வரலாற்று நினைவுச் சின்னங்களோ இல்லை.

எனவே, இத்திட்டத்தால் சுற்றுச் சூழலுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் இத்திட்டம் அமையும் பட்சத்தில் மக்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடையும். வேலைவாய்ப்புகள் பெருகும். கல்வி வசதிகள் மேம்படுத்தப்படும். சுற்றுச் சூழலின் தரம் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் 26.35 கோடி ரூபாய்.

**இதற்கடுத்து தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட், திருப்பூர் சார்பாக அவர்களது திட்ட ஆலோசகர் திரு. ஜெயக்கொடி அவர்கள் சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் அதை நிவர்த்தி செய்யும் முறைகள் சம்பந்தமாக கணினி திரைக்காட்சி மூலமாக கீழ்கண்டவாறு விவரித்தார்.**

எங்களது பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சாயத்தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை. 9 சலவை தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளது. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 2.4 ஏக்கர் நிலப்பரப்பில் வேட்டுவபாளையம் கிராமத்தில் நொய்யல் ஆற்றிலிருந்து 200 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த சலவைத் தொழிற்சாலைகளில் தொட்டி முறையில் சலவையேற்றப்படுவதும் மற்றும் வின்ச் இயந்திரம் மூலமாகவும் சலவையேற்றப்படுகிறது. தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் (பி) லிமிடெட் நிறுவனத்தின் திட்ட அறிக்கை அண்ணா பல்கலைக் கழகத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உறுப்பினர் தொழிற்சாலைகள் அனைத்தும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 1.6 கி.மீ. சுற்றளவிற்குள் அமைந்துள்ளது. இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு நீரானது முதன்மை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு மூன்று நிலை எதிர்மறை சவ்வூடு பரவல் முறைகளில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. அவ்வாறு சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரானது நன்னீராக மாற்றப்பட்டு சுத்திகரிப்பு நிலைய வளாகத்திற்குள் அமைக்கப்பட்ட மேல் நிலைத் தொட்டியில் உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கு திரும்ப அனுப்பப்படுவதற்காக சேமித்து வைக்கப்படும். மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடு பரவல் மூலமாக வெளியேற்றப்படும் அடர் கழிவு நீரானது ஐந்து நிலை ஆவியாக்கும் கூடத்தில் ஆவியாக்கப்பட்டு, வடிப்பான் மூலமாக நன்னீராக பெறப்படுகிறது. இதிலிருந்து பெறப்படும் கழிவு உப்பானது மற்ற திடக்கழிவுகளுடன் சேர்த்து சென்னைக்கு அருகே கும்மிடிப்பூண்டியில் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய தர நிர்ணயங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ள பொது திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இடைப்பட்ட காலத்தில் மேற்படி திடக்கழிவுகள் பொது சுத்திகரிப்பு நிலைய வளாகத்திற்குள்ளேயே ஒதுக்குப்புறமான இடத்தில் பிளாஸ்டிக் மூட்டைகளில் கட்டப்பட்டு கூரையின் கீழ் சேமித்து வைக்கப்படும். இவ்வாறாக இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முழுவதுமாக ஜீரோ கழிவு நீர் வெளியேற்றம் நடைமுறைபடுத்தப்படுவதாக இருக்கிறது. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் ஜெனரேட்டர் இயந்திரங்களுக்கு உரிய புகைபோக்கி அமைப்புகளும் ஒலி மாசு ஏற்படாவண்ணம் முழுதும் மூடப்பட்ட அமைப்பும் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உபயோகப்படுத்தும் இரசாயனங்கள், சுத்திகரிக்கப்பட்ட நன்னீரின் தரம் பற்றிய விபரங்கள், உலர வைக்கும் கலன்களின் அளவுகள் பற்றி விரிவாக விவரித்தார். பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றிலும் 10 கி.மீ. பரப்பில் ஐந்து இடங்களில் காற்று, நீர், மண் மற்றும் ஒலி மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அவை அரசின் தர நிர்ணய அளவுகளுக்குள் உள்ளது. மேலும் இத்திட்டப் பகுதிக்கு அருகில் வனவிலங்கு சரணாலயங்களோ, வரலாற்று நினைவுச் சின்னங்களோ இல்லை.

எனவே, இத்திட்டத்தால் சுற்றுச் சூழலுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் இத்திட்டம் அமையும் பட்சத்தில் மக்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடையும். வேலைவாய்ப்புகள் பெருகும். கல்வி வசதிகள் மேம்படுத்தப்படும். சுற்றுச் சூழலின் தரம் மேம்படுத்தப்படும். எனவே, பொதுமக்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

<u>பொதுமக்களின் கருத்துக்கள்</u>

கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களில் 11 நபர்கள் வாய்மொழியாக தங்களது கருத்துக்களை கீழ்கண்டவாறு தெரிவித்தனர். அதற்கு திட்ட ஆலோசகர்கள் அளித்த விளக்கமும் பின்வருமாறு.

**1. திரு. என். முருகேசன், செட்டிபாளையம்**

இந்த பொது சுத்திகரிப்பு நிலையத்தால் எத்தனை குடும்பங்கள் வளர்ச்சியடையும்?.

தி/ள். பார்க் பொது சுத்திகரிப்பு நிலையத்தின் திட்ட ஆலோசகரான திரு. ஜெயசீலன் அவர்களது விளக்கம்

இத்திட்டத்தால், சுமார் 125 மக்களுக்கு நேரடியான வேலைவாய்ப்பும் சுமார் 300 மக்களுக்கு மறைமுகமான வேலைவாய்ப்பும் கிடைக்கப் பெற்று பயனடைவார்கள். எனவே, இத்திட்டத்தை வரவேற்குமாறு கேட்டுக் கொண்டார்.

2. **திரு. கே.சி.எம். பாலசுப்ரமணியம், மாநில விவசாய ஆலோசகர்**

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய அமைவிடம் குறித்து அரசு விதிகள் ஏதேனும் உண்டா?.

தி/ள். பார்க் பொது சுத்திகரிப்பு நிலையத்தின் திட்ட ஆலோசகரான திரு. ஜெயசீலன் அவர்களது விளக்கம்

நொய்யல் ஆற்றிலிருந்து 5 கி.மீ. தொவைிற்கு அப்பால் தி/ள். பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளதால் இவை 5 கி.மீ. அரசாணை மீறப்படவில்லை.

தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய திட்ட ஆலோசகர் திரு.ஜெயக்கொடி அவர்களது விளக்கம்

வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உறுப்பினர் தொழிற்சாலைகள் அனைத்தும் சலவைத் தொழிற்சாலைகளே. எனவே, இத் தொழிற்சாலைகள் 5 கி.மீ. அரசாணையின் கீழ் இடம்பெறாது. சாயத் தொழிற்சாலைகள் மட்டுமே 5 கி.மீ. அரசாணையின் கீழ் இடம்பெறும்.

திரு. கே.சி.எம். பாலசுப்ரமணியம், மாநில விவசாய ஆலோசகர் அவர்கள் குறுக்கிட்டு திருப்பூர் பகுதியிலுள்ள நல்லாற்று ஓடையையும் நொய்யல் ஆற்றின் உபநதியாக கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆற்றுப் படுகையின் அருகிலேயே பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து மக்களை திசை திருப்புகிறார்கள் என்று கூறினார்.

3. **திரு. கே. சி. குழந்தைசாமி, நொய்யல் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம்.**

சாயத் தொழிற்சாலைகள் நொய்யல் ஆற்றிற்கு 5 கி.மீ. தொலைவிற்கு அப்பால் தான் அமைய வேண்டும் என்று அரசாணை உள்ளது. ஆனால், தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நொய்யல் ஆற்றிற்கு அருகிலேயே உள்ளது. இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சாயத் தொழிற்சாலைகளும் மற்றும் சலவைத் தொழிற்சாலைகளும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இவை 5 கி.மீ. அரசாணைக்கு கட்டுப்படும்.

தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய திட்ட ஆலோசகர் திரு.ஜெயக்கொடி அவர்களது விளக்கம்

தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 9 சலவை தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. இந்த தொழிற்சாலைகளுக்கு வாரியத்தின் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலைகள் குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலையாக வாரியத்தால் கருதப்பட்டு “ஆரஞ்சு” வகைப்பாட்டில் உள்ளது. மேலும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமானது ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் ஒரு விரிவாக்கமாகவே உயர்நீதி மன்றத்தால் கருதப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தி/ள். வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

4. **திரு. துரை, வஞ்சிபாளையம்**

கழிவு நீரை இயந்திரங்கள் வழியாக ஆவியாக்கும் பொழுது காற்று மாசு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் நொய்யல் ஆற்றைத் தவிர நல்லாறும் மாசுபடுகிறது. நல்லாறு இறுதியில் நொய்யல் ஆற்றில் கலக்கிறது. ஏற்கனவே உள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் முறையாக சேமித்து வைக்கப்படாமலும் பிளாஸ்டிக் போர்வையால் முழுவதுமாக மூடப்படாமல் இருப்பதாலும் கூரைகள் அமைக்கப்படாமல் இருப்பதாலும் திடக்கழிவுகள் மழை நீரினால் அடித்து செல்லப்பட்டு அருகிலுள்ள வடிகால் வாய்க்கால்களில் கலந்து மாசு ஏற்படுத்துகிறது. எனவே, இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வாரியத்தின் இசைவாணை வழங்குவதற்கு முன்பே திடக்கழிவுகளுக்கு பிளாஸ்டிக் போர்வைகளால் மூடப்பட்டு கூரையின் கீழ் சேமித்து வைக்கப்பட வேண்டும்.

தி/ள். பார்க் பொது சுத்திகரிப்பு நிலையத்தின் திட்ட ஆலோசகரான திரு. ஜெயசீலன்

அவர்களது விளக்கம்

இயந்திரம் மூலமாக ஆவியாக்கும் பகுதியானது முழுவதுமாக மூடப்பட்ட அமைப்பாகும். இதிலிருந்து ஆவி வெளியாகி காற்றில் கலப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றிலும் வாரத்திற்கு ஒரு முறை காற்று மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும். எனவே, காற்று மாசுபடுவதற்கு வாய்ப்பில்லை. ஆவியாக்கல் இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவுகளானது காய வைக்கப்பட்டு சென்னைக்கு அருகே கும்மிடிப்பூண்டியில் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய தர நிர்ணயங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ள பொது திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இடைப்பட்ட காலத்தில் மேற்படி திடக்கழிவுகள் பொது சுத்திகரிப்பு நிலைய வளாகத்திற்குள்ளேயே ஒதுக்குப்புறமான இடத்தில் பிளாஸ்டிக் மூட்டைகளில் கட்டப்பட்டு கூரையின் கீழ் சேமித்து வைக்கப்படும் என்று உறுதி கூறினார்.

**5. திரு. சி. ரங்கசாமி, தலைவர், தொட்டிபாளையம் ஊராட்சி**

ஏற்கனவே உள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் நொய்யல் ஆறு மாசுபட்டு வருகிறது. இதனால் திருப்பூர் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த ஆறு மாதங்களாக அதிகாரிகள் கழிவு நீர் ஜீரோ முறை வெளியேற்றத்தை கண்காணித்து வருவதால் நொய்யல் ஆறு மாசுபடுவது குறைக்கப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும். இந்த கண்காணிப்புக் குழுவில் விவசாய பொதுமக்களையும் ஈடுபடுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகளால் எந்தவொரு விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

**6. திரு. ஆர். மாரப்பன், தலைவர், செட்டிபாளையம் ஊராட்சி.**

தொட்டிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் கூறியதுபோல் திருப்பூர் பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபட்டு வண்ணமாக மாறியது. ஆனால் ஜீரோ கழிவுநீர் வெறியேற்றும் முறை அமுல்படுத்துவதால் நிலத்தடி நீர் மாசுபடுவது தடுக்கப்படும். எனவே, ஜிரோ கழிவு நீர் வெளியேற்றும் முறை முழுவதுமாக அமுல்படுத்தப்பட்டு விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிற்சாலைகளும் வளர்ச்சியடைய வேண்டும். எனவே, இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஜீரோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக அமுல்படுத்தும் பட்சத்தில் எங்களது ஊராட்சிக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஜீரோ கழிவு நீர் சுத்திகரிப்பை தொடர்ச்சியாக கண்காணிக்க ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

மாவட்ட சுற்றச் சூழல் பொறியாளர், திருப்பூர் அவர்களின் விளக்கம்

தற்சமயம் மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் அலுவலகத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பதினெட்டு பொறியாளர் மற்றும் விஞ்ஞானிகள் கொண்டும் ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டு திருப்பூரில் உள்ள சாய, சலவைத் தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் ஜீரோ கழிவு நீர் வெளியேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. குழுக்களின் அறிக்கை வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கையின் பொருட்டு ஜீரோ கழிவு நீர் வெளியேற்றத்தை மீறும் தொழிற்சாலைகள் மீது தக்க நடவடிக்கைகள் வாரியத்தால் எடுக்கப்படும்.

**7. திரு. எம். செல்வராஜ்**

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஜீரோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக அமுல்படுத்தும் பட்சத்தில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எனவே இந்த திட்டத்தை வரவேற்கிறோம்.

**8. திரு. தங்கவேலு, செட்டிபாளையம்**

கடந்த மூன்று மாதங்களாக திருப்பூர் பகுதிகளில் சாயத் தொழிற்சாலைகள் இயங்காமல் இருப்பதால், தொழிற்சாலைகள் நலிவடைந்துள்ளது. இதனால், வேலைவாய்ப்பு இழந்து சுமார் 600 குடும்பங்கள் பாதிக்கப்படுகிறது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும். பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஜீரோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக அமுல்படுத்தும் பட்சத்தில் எந்தவித கழிவு நீரும் நொய்யலாற்றுக்கு வெளியேற்றப்படாது.

**9. திரு. கோவிந்தசாமி நாடார், அங்கேரிபாளையம்.**

எங்களது பகுதிக்கு அருகில் பி.கே.பி. என்ற சாயத் தொழிற்சாலை அமைந்துள்ளது. இந்த தொழிற்சாலையால் எங்களுக்கு எந்த விதமான இடைஞ்சலும் இல்லை. இந்த தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் அதிகமான பேர் வேலையிழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைவதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**10. திரு. கிருஷ்ணன், செயலாளர், திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் உரிமையாளர் சங்கம்**

திருப்பூரில் 20 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ஏற்கனவே சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ன்படி பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டது. மீதமுள்ள இந்த இரண்டு வேட்டுவபாளையம் மற்றும் பார்க் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தற்சமயம் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறுகிறது. புதிய தொழில்நுட்பங்களை ஏற்படுத்தி தொழிற்சாலைகள் வளர்ந்து சுற்றுச்

சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு விவசாயப் பெருமக்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டார்.

**திரு. கே. சி. குழந்தைசாமி, நொய்யல் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம்.**

பார்க் மற்றும் வேட்டுவபாளையம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் சம்பந்தமாக எங்களது கருத்துக்களை மனுவான எழுதி இத்துடன் கொடுத்துள்ளோம். எனவே இவற்றை வாரியத்திற்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**11. திரு. என். முருகேசன்.**

இந்த பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைவதால் எங்களது பகுதிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வேலைவாய்ப்புகள் பெருகும். ஏற்கனவே பல சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் அதிகம் பேர் வேலையிழந்து அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த தொழிற்சாலைகளை திரும்பவும் இயக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாயம் பெருக வேண்டும். பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களைக் கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.

**திரு. கே.சி.எம். பாலசுப்ரமணியம், மாநில விவசாய ஆலோசகர்**

ஜீரோ கழிவுநீர் வெளியேற்றம் என்பது மக்களை திசை திருப்பும் நடவடிக்கை ஆகும். நடைமுறையில் சாத்தியமில்லாத தீர்வாகும். ஏற்கனவே இயங்கி வரும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்வாகிகளே ஜீரோ கழிவு நீர் வெளியேற்றம் சாத்தியப்படாது என்று கூறியுள்ளனர். எனவே, ஜீரோ கழிவு நீர் வெளியேற்றம் என்பது நடைமுறையில் சாத்தியப்படுமா அல்லது சாத்தியப்படாதா என்று தெரிவிக்கவும்.

<u>மாவட்ட சுற்றச் சூழல் பொறியாளர், திருப்பூர் அவர்களின் விளக்கம்</u>

இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தில் பொதுமக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்படுமே தவிர ஜீரோ கழிவு நீர் வெளியேற்றம் சாத்தியப்படுமா அல்லது சாத்தியப்படாதா என்பது பற்றி விவாதிக்கப்படுவதற்காக அல்ல என்று கூறினார்.

இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்கள் மேலும் பொதுமக்கள் யாரேனும் கருத்து தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறிய போதும் யாரும் கருத்து தெரிவிக்க முன்வரவில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்கள் அனைத்து பொதுமக்களின் கருத்துகளும் ஒலி ஒளி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டு புகைப்படங்கள் எடுக்கப்பட்டதும் கூட்ட சுருக்க நடவடிக்கைகளும், பொதுமக்களுடைய மனுக்களும் அரசுக்கு தக்க நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும் என்று கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

இதைத் தொடர்ந்து பொதுமக்களின் கருத்து கேட்டுணரும் கூட்டம் மதியம் 1.00 மணிக்கு நிறைவு பெற்றது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு (CD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட 73 நபர்களின் வருகைப்பதிவும் பிற்சேர்க்கை 1-ல் இணைக்கப்பட்டுள்ளது.

தி/ள். பார்க் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவுநீர் எடுத்து வரக்கூடிய குழாய்கள் பொது இடங்களான ஆற்றோரங்களிலும், சாலையோரங்களிலும் கொண்டு செல்ல உரிய அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ளதாக திரு.எ.பி.சுப்ரமணியம் அவர்கள் அளித்துள்ள புகார் மனு இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துகளுக்கு திட்ட பொறுப்பாளர்கள் கொடுத்த விளக்கங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பிற்சேர்க்கை-2ல் இணைக்கப்பட்டுள்ளது.

ஓம்..........
மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர்

ஓம்..........
மாவட்ட ஆட்சியர்
திருப்பூர் மாவட்டம்

//உண்மை நகல் //

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர்

PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR M/S. PARK COMMON EFFLUENT TREATMENT PLANT (P) LIMITED., AND M/S. VETTUVA PALAYAM COMMON EFFLUENT TREATMENT & RECYCLING PLANT PRIVATE LIMITED, TIRUPPUR

| | | |
|---|---|---|
| Name of the Project | : | 1. M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited.,<br>S.F.No.327, Poyampalayam Pirivu (West)<br>Pitchampalayam Post<br>Tiruppur District – 641 603.<br>2. M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited<br>S.F.No.30/1, 30/2, 30/3, Iyyapillai Thottam, Somanur Road<br>Vettuvapalayam, Mangalam<br>Tiruppur – 641 663. |
| Place of Public Hearing | : | Sri Avinashiappar Thirumana Mandapam 18-A, Kovai Main Road, Avinashi. |
| Date and Time | : | 04.02.2010 at 11.00 a.m. |

PRESENT:

| | | |
|---|---|---|
| 1. Thiru.C. Samayamurthy, I.A.S. | : | District Collector<br>Tiruppur District, Tiruppur |
| 2. Thiru.R. Kannan | : | District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board Tiruppur |

Project Proponents:

| | | |
|---|---|---|
| 1. Thiru. Easwaramurthy | : | Managing Director<br>M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited., |
| 2. Thiru. Subramaniam | : | Managing Director<br>M/s.Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited |

Number of persons participated in the Public Hearing is 73. The attendance of the public attended public hearing is enclosed in Annexure-I.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruppur has welcomed the District Collector, Tiruppur, Directors of the Common Effluent Treatment Plants, Farmers, public and press reportors participated in the meeting and explained about the proposed Common Effluent Treatment Plants of M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited and M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited as follows:

A draft Environmental Impact Assessment Report has been prepared based on the Potential Environmental Impacts, the mitigation of Impacts and Environmental Management Plan. M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited and M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited and furnished to this office. The public hearing has already been conducted for 18 CETPs in Tiruppur during October 2008. Public hearing for the remaining two CETPs of M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited and M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited is being conducted today. The proceedings of the public hearing are recorded, photographs and video will be taken and the same will be submitted to the State Environmental Impact Assessment Authority, Chennai for necessary action. The public can express views either orally or by giving written petition in this meeting.

Then the District Environmental Engineer, Tiruppur has invited the District Collector to preside over the public hearing.

Then the District Collector, Tiruppur has welcomed the District Environmental Engineer, Tiruppur, Directors of the Common Effluent Treatment Plants, Farmers, public and press reportors participated in the meeting and explained as below:

The proceedings of the public hearing are recorded, photographs and video will be taken and the same will be submitted to the Government for necessary action. Then he invited the representative of CETPs to explain about their project and then the public can express views on environmental aspects either orally or by giving written petition in this meeting.

Thiru. Jeyaseelan, The project consultant of M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited has explained about their project on Environmental Impact and the Management Plans in power point presentation.

Agriculture should be as well as Industries should be developed and environment should be protected. The project report of M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited is approved by Anna University. The M/s. Park Common Effluent Treatment Plant (P) Limited will be a model CETP in Tiruppur. Then he explained about the Tiruppur Town and the location of the CETP. The CETP is located more than 5 k.m. from the river Noyyal and hence the siting does not attract the Government orders. The CETP comprises of 9 dyeing units. All the dyeing units are located within 2 k.m. radius from CETP in Poyampalayam village. All the dyeing industries are registered. The process in the dyeing industry is washing, dyeing, washing and drying of hosiery fabric. The dyeing industries require 3650 $m^3$/day of fresh water for carrying of dyeing operation. The effluents generated from the dyeing industries are treated in the primary treatment system comprising of the new technology of Dissolved Air Floatation.

Then the effluent will be treated by two stage Reverse Osmosis Plant and Mechanical Vapour Recompresson reactor so as to evoporate. The salt recovered from the Mechanical Vapour Recompresson Reactor and sludge generated during the Effluent Treatment will be sent to secured land facility, established as per the Central Pollution Control norms, located at Gummidipoondi, Near Chennai. The sludge generated in the meantime will be packed in polyethene bags, covered with plastic sheets and stored wihin a roof inside the premises in an isolated area.

The permeate recovered from the R.O. Plant along with the brine solution recovered from the nano filteration will be sent to the member units for the recycling in their process. The sample of soil, water, air and noise are taken in around the CETP premises and are analysed. The Ambient Air Quality in the above survey is found to be within the norms prescribed by the Board. A dence green belt will be developed around the premises of the CETP so as to improve the environment. There is no wild life sanctuary and archeologically important places near the CETP area.

Hence, there will be no impact on environment due to this project. The social status, employment, education and environment will be improved while implementing this project. Total project cost is Rs.26.35 crores.

Then Thiru.Jeyakodi, Technial consultant of M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited has explained about the Environmental Impacts and its management plan thorugh power point presentation as given below:

Our CETP comprises of 9 bleaching units only. There is no dyeing industry in our CETP. CETP is located at a distance of 200 meter from River Noyyal in Vettuvapalayam village in an area of 2.4 acres. Manual bleaching and bleaching through winch machines are carried out in the bleaching unit. The project report of M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited is approved by Anna University and consent for Establishment has already beeen issued by Tamilnadu Polluitohn Control Board. The member units of the CETP are located within 1.6 km. radius from CETP. The treate effluents generated from the units are treated in primary treatment system and 3 stage Reverse Osmosis Plant. The permeate recovered from the R.O. Plant will be stored in overhead tank installed in the premises so as to recycle the permeate to

the member units for their process use. The reject generated from the R.O. III will be evaporated in 5 stage multiple effect evaporator and condensate water will be recovered. The salt generated from the Multiple Effect Evaporator along with the sludge generated from the treatement of waste water will be sent to secured land facility, established as per the Central Pollution Control norms, located at Gummidipoondi, Near Chennai. The sludge generated in the meantime will be packed in polyethene bags, covered with plastic sheets and stored wihin a roof inside the premises in an isolated area. In this way a complete zero liquid discharge system will be implemented in the CETP. Necessary stack and acoustic enclosure is provided to the Diesel Generator so as to control the air and noise pollution.

Then he has explained about the chemicals used for effluent treatment, quality of the treated water and area of the solar evaporation pan provided. The soil, water, air and noise samples has been taken around 10 k.m. radius from the CETP in 5 locations and analysed. The results of the surveys are within the norms prescribed by the government. There is no wild life sanctuary and archeologically important places near the CETP area.

Hence, there will be no impact on environment due to this project. The social status, employment, education and environment will be improved while implementing this project. Therefore the public can encourage the implementation of the project.

**PUBLIC OPION**:

In the public hearing 11 persons have expressed their opinion as given below: The explanation given by the Project consultants are also furnished:

**1. Thiru.N. Murugesan,Chettipalayam:**

How many families will be benefited due to implemention of the CETPs?

Explanation of Project consultant of M/s.Park Common Effluent Treatment Plant (P) Limited, Thiru. Jeyaseelan:

There will be 125 direct employments and 300 indirect employments due this project. Hence the public can encourage the project.

**2. Thiru. K.C.M. Balasubramaniam, State Agricultural Consultant:**

Is there any government order related to the location of the CETPs?

Explanation of Project consultant of M/s.Park Common Effluent Treatment Plant (P) Limited, Thiru. Jeyaseelan:

The Park Common Effluent Treatment Plant (P) Limited is located more than 5 k.m. distance from river Noyyal and hence does not attract the 5 k.m. G.O.

Explanation of Project consultant of M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited Thiru. Jeyakodi:

The member units of the M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited are only bleaching units. There is no dyeing unit in CETP. Hence the bleaching unit does not attract the 5 k.m. G.O.

Meanwhile Thiru. K.C.M. Balasubramaniam, State Agricultural Consultant has intravened and requested to consider Nallar River also as a tributary to river Noyyal. The CETPs are diverting the public by locating the CETP on the banks of the River.

**3. Thiru. K.C. Kulanthaisamy, Noyyal River Ayacutdars Protection Association:**

There is a Government Order which bans the location of dyeing industry within 5 k.m. radius from river Noyyal. But M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited is located nearer to River Noyyal. Dyeing industries and bleaching industries are included as a member of the CETP. Hence the member units are attracted by the above 5 k.m. Government Order.

Explanation of Project consultant of M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited Thiru. Jeyakodi:

The M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited includes 9 bleaching units only as members. Consent order has been issued to the member units. Bleaching

units are classified as 'Orange' category, a less polluting industry by the Tamilnadu Pollution Control Board. The Hon'ble High Court of Madras has already considered and ordered that the CETPs are an extended facility of the existing unit. Consent for Establishment has been issued to the M/s. Vettuvapalayam Common Effluent Treatment & Recycling Plant Private Limited.

**4. Thiru.Durai, Vanjipalayam:**

Air pollution will be created while evaporating the effluents through Mechanical Evaporator. Apart from river Noyyal, Nallar River also polluted due to the existing CETPs in Tiruppur. Nallar finally confluences with river Noyyal.

The sludge generated from the existing CETPs are not completely covered with plastic sheet and not stored in closed roof so that the sludges are reached to the nearby by drainage and confluences with the irrigation channel and pollutes the same. Hence, necessary consent to be issued to the CETP only after providing necessary enclosures with plastic sheets and after installation of closed roof for storing the hazardous sludge.

<u>Explanation of Project consultant of M/s.Park Common Effluent Treatment Plant (P) Limited, Thiru. Jeyaseelan:</u>

The Mechanical Vapour Recompressor Reactor is a closed type. There is no chance of letting out any vapour from the above evaporator. However, contiuous Ambient Air Quality survey will be conducted once in a week around the CETP premises and analysed. Hence there is no chance of polluting the air. The salt recovered from the Mechanical Vapour Recompressor Reactor is dried and sent to secured land facility, established as per the Central Pollution Control norms, located at Gummidipoondi, Near Chennai. He further assured that the sludge generated in the meantime will be packed in polyethene bags, covered with plastic sheets and stored wihin a roof inside the premises in an isolated area.

**5. Thiru.C.Rangasamy, President, Thottipalayam Panchayat:**

The Noyyal River is polluted due to the existing CETPs in Tiruppur. Hence the Tiruppur public are affected. The pollution in the River Noyyal is reduced due to the intensive monitoring by the officials for the past six months. Hence the monitoring should be continued. The farmers can also been included in the monitoring team. The agri lands should be protected from the industrial discharge.

**6. Thiru. R. Marappan, President, Chettipalayam Panchayat:**

As told by the President of Thottipalayam Panchayat, the ground water in Tiruppur are became polluted and changed to coloured water. But there will be no ground water pollution if zero liquid discharge system is implemented. Hence, the zero liquid dischage system shall completely be implemented so as to protect the agricultural lands. The industry should also be developed. Hence our Panchayat has no objection to the CETP if zero liquid discharge system is completely implemented. A monitoring team should be formed for monitoring the zero liquid discharge system.

<u>Explanation of District Environmental Engineer, Tiruppur</u>

The zero liquid discharge system of the existing CETPs and the individual Effluent Treatment Plants are being intensively monitored by forming 6 teams comprinsing of 18 Engineers and Scientists deputed from other Districts by Tamilnadu Pollution Control Board. The reports of the inspection team are being submitted to the Board office. Based on the report necessary action will be taken against the violating industries.

**7. Thru. M. Selvaraj:**

We have no objection for the implementation of the CETPs if they achieve zero liquid system completely. Hence we welcome the project.

**8. Thiru. Thangavelu, Chettipalayam:**

Many industries are becoming sick due to non-operation for the past three months. So, about 600 families are affected due to unemployment. They have to be safeguarded. There will be no effluent

discharge to river Noyyal if zero liquid discharge system is implemented completely in the Effluent Treatment Plants.

**9. Thiru. Govindasamy Nadar, Angeripalayam:**

The unit of M/s. P.K.P. Textiles is located in our area. There is no disturbance to us due to the operation of the unit. Many people have become unemployed due to the closure of the unit. Hence, we don't have any objection for the implementation of the CETP.

**10. Thiru. Krishnan, Secretary, Dyers Association of Tiruppur:**

20 CETPs are located in Tiruppur area. Public hearing has already been conducted for the 18 CETPs as per the Environmental Impace Assessment Notification, 2006. At present public hearing is being conducted for the remaining two CETPs. The industry should be developed with new technology so as to protect the environment. The farmer should also help for the implementation of the project.

**Thiru. K.C. Kulanthaisamy, Noyyal River Ayacutdars Protection Association:**

We have given a written petition regarding M/s. Park CETP and M/s. Vettuvapalayam CETP, hence we requested you to forward the same to the authorities and take necessary action for our petition.

**11. Thiru.N. Murugesan:**

There will be no damage to our area due to the implementation of the CETPs. More employments will be generated. Many families have been affected due to unemployment as many dyeing industries in Tiruppur are closed recently. Hence necessary action to be taken for the operation of the dyeing industries. Agriculture to be developed. A committee should be formed comprising of the local public for monitoring the CETPs.

**Thiru. K.C.M. Balasubramaniam, State Agricultural Consultant:**

Public are diverted by telling the zero liquid discharge system in the CETPs. Zero liquid discharge system is not a practical solution. The Directors of the existing CETPs have already expressed that the zero liquid discharge system is not feasible. Hence whether the zero liquid discharge system is practically possible or not.

<u>Explanation of District Environmental Engineer, Tiruppur</u>

The public hearing is being conducted so as to record the views/opinion on environmental issues regarding the implementation of the project. In this forum of public hearing discussion on the possibility of implementing the zero liquid discharge system could not be taken up.

Finally the District Collector, Tiruppur has requested the public for any further views and opinion.However no public came forward to express their views further.Hence the District Collector,Tiruppur concluded the public hearing and informed about the recording of the present public hearing proceedings and told vote of thanks.Then the publichearing came to an end at1.00p.m.

The soft copy of the video recording of the public hearing proceedings is enclosed in the form of compact disc.

The attendance of the 73 public participated in the public hearing is enclosed in Annexure-I.

A comlaint received from Thiru.A.P.Subramaniam regarding the pipelines carrying effluent to PARK CETP have been laid along the riverside and roadside without getting permission from competent authority is enclosed.

A statement of the issues raised by the public during public hearing and comments of the project proponent in Tamil and in English is enclosed in Annexure-II.

| | |
|---|---|
| -Sd- | -Sd- |
| District Environmental Engineer | District Collector |
| TNPC Board, Tiruppur | Tiruppur District |

-TRUE COPY-

District Environmental Engineer
TNPC Board, Tiruppur